மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார், உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: முக்கியமான கேள்வி. குற்றலாத்திற்கு வருகிறவர்களுக்கு வசதிகள் செய்யவேண்டுமென்ற முறையிலே அப்படிச் செய்வதாகச் சொல்கிறார்கள். இப்படியே போனால் பீச்சிலே காற்று வாங்குவதற்குக்கூட— நாங்கள் இடத்தைச் சுத்தப்படுத்த வேண்டி இருக்கிறது—என்று சொல்லி வரிப்போட கூடிய நிலைமை வரும் அதை யோசிப்பார்களா? (பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தவல் கோரல்

அ. டைரக்டர்—ஜெனரல் ஆப் போலீஸ் பதவி

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே பாயின்ட் ஆப் ஆர்டர். தமிழகத்திலே டைரக்டர்—ஜெனரல் ஆப் போலீஸ் என்ற உயர் பதவி இந்த ஆட்சி கடந்த முறை பதவியிலே இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட பதவியாகும். அந்தப் பதவி கடந்த சில மாதங்களாகவே நிரப்பப்படாமல் இருக்கின்ற காரணத்தினாலே தமிழகத்திலே உள்ள உயர் போலீஸ் அதிகாரிகள் மத்தியிலே ஒரு நிம்மதி இல்லாத நிலைமை இருப்பதோடு அந்த அதிகாரிகள் ஹோம் டிபார்ட்மெண்டிலே உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிக்குக் கட்டுப்பட்டு நல்ல முறையிலே செயலாற்ற வேண்டியிருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பதவி விரைவிலே நிரப்பப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. ஆகவே அனுமதி மறுக்கப்படுகிறது.

ஆ. உறுப்பினர்கள் எடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. என். வி. என். சோமு: நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பற்றிப் பிறகு வருகிறேன்.

திரு. என். வி. என். சோமு: * * **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்குறிப்பிலே இவையெல்லாம் ஏறாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.